**வாசிக்க: தானியேல் 4:1-37**

**அகந்தை ஆண்டவருக்கு அருவருப்பு**

பின்பு ஒருநாள் ராஜாவாகிய நேபுகாத்நேச்சர் ஒரு கனவை கண்டான். அதின் அர்த்தத்தை அறிந்து கொள்ள தானியேலை வரவழைத்தான். கனவை கேட்ட தானியேல் கலங்கி அர்த்தத்தை சொல்ல தயங்கினான். பின்பு ராஜாவை பார்த்து தேவனுக்கு பிரியமில்லாத ஒரு காரியத்தை நீர் செய்துவருவதால், உம்மை மனிதர்களிடமிருந்து தள்ளுகிறதை வெளிபடுத்தினார். ஆகவே ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் கேட்டு நீதியாக நடந்து, சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது பாவங்களையும் அக்கிரமங்களையும் அகற்றிவிடும். அப்பொழுது உம்முடைய வாழ்வை கர்த்தர் நீடிக்கலாம் என்றான். இதை கேட்டபின் 12 மாதங்கள் கழிந்து ஒருநாள் தன் மனதில் மிகுந்த அகந்தையுடன் தேசத்தைபார்த்து, என்

வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று,

என் ராஜ்யத்துக்கு அரமனையாக, நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். அடுத்த கணம் அவன்மதியிழந்து மிருகங்களை போல ஆனான். ஏழு காலங்கள் சென்றபின் ராஜாவிற்கு புத்தி வந்தது. கர்த்தர் அவன் மேல் மனமிரங்கி மறுபடியும் அவனை ராஜாவின் ஸ்தானத்தில் உயர்த்தினார். அப்போது உண்மையாக மனந்திரும்பி தேவனை துதித்து ஆராதித்து பின்னர் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.

**கேள்வி:**

இந்த ராஜா இரண்டு முறை தேவனின் அற்புதத்தை பார்த்து அவர்தான் பரலோகத்தின் தேவன் என சொல்லி புகழ்ந்தானே. பின்னர் ஏன் அவனுக்கு இந்த கதி...?

**பதில்:**

நாம் எத்தனை முறை தேவனை துதிக்கிறோம் என்பது முக்கியமல்ல. எப்படிப்பட்ட இருதயத்தோடு அவரை துதிக்கிறோம் என்பதே முக்கியம். தானியேல் முதல்முறை கனவையும், அதின் அர்த்தத்தையும் சொல்லியபோது அவரே தேவன் சர்வ பூமிக்கும் தேவன் என்றவன், பின்னர் பொற்சிலையை ஏன் செய்வித்து துதித்தான் அங்கே மறுபடியும் அக்கினியின் நடுவில் தேவனை பார்த்து துதித்தாலும், உண்மையாக

மனந்திரும்பாததால் தான் தேவன் அவனை எச்சரித்தார். ஆனால் 12 மாதம் ஒன்றும் நடக்கவில்லை என்றதும் இனி பயமில்லை என நினைத்து அகந்தை கொண்டான். இந்தமுறை தண்டிக்கப்பட்டபிறகே உணர்வடைந்து, உண்மையாக மனந்திரும்பி தேவனை உண்மையாக தொழுது கொண்டான்.

பிரியமானவர்களே தேவனாகிய கர்த்தர் தம்மை ஆவியேடும் உண்மையோடும் தொழுது கொள்பவர்களையே தேடுகிறார். அவர் தாழ்மையுள்ளவனுக்கு அந்த கிருபை தந்து ஆசீர்வதிக்கிறார். நாமும் ஏன் அந்த கிருபையை பெற்று கொள்ளகூடாது..?

நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான். தானியேல் 4:37

## ஜெபம்

நேற்றும் இன்றும் என்றும் மாறாத கர்த்தவே. உங்களுக்கு பிரியமான வழிகளில் வாழ்ந்து, உங்களை ஆராதிப்போமாக. ஆமென்